MAY 2022

U/ID 22218/UCZ2A/ UCW2A/UCY2A/UCV2A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What do you mean by Departmental Accounting?

   துறை சார்ந்த கணக்கியல் என்பதன் உனது பொருள் யாது?

2. What is an interdepartmental transfer?

   துறைகளுக்குள் மாற்றம் செய்தல் என்றால் என்ன?

3. Give any two benefits of Departmental Accounting.

   துறைவாரி கணக்கியலின் நன்மைகள் ஏதேனும் இரண்டினைத் தருக.

4. What is dependent branch?

   சார்பு கிளை என்றால் என்ன?

5. Define Partnership.

   கூட்டாண்மை வரையறு.

6. What is new profit sharing ratio?

   புதிய இலாப பகிர்வு விகிதம் என்றால் என்ன?

7. What is revaluation account?

   மறுமதிப்பீடு கணக்கு என்றால் என்ன?

8. Mention any two modes of dissolution of firm.

   நிறும கலைப்பின் ஏதேனும் இரண்டு வழிகளைக் குறிப்பிடுக.

9. What is Proportionate capital method?

   விகிதாச்சார முதலின முறை என்றால் என்ன?

10. Which items require special treatment under death of a partner?

ஒரு கூட்டாளி இறப்பின் கீழ் சிறப்பு தேவைகள் யாது?

11. What are the objectives of branch account?

கிளைக் கணக்கின் நோக்கங்கள் யாது?

12. State the meaning of down payment.

உடனடி செலுத்துதல் என்பதன் பொருள் கூறுக.

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. X limited of Mumbai has a branch in Delhi. From the following data, prepare branch stock account under stock and debtors system.

	Rs.
Goods sent from Head Office	50,000
Returns to HO	1,000
Cash sales	35,500
Credit sales	8,000
Opening stock	10,000
Closing stock	11,000

மும்பையில் உள்ள X லிமிடெட் டெல்லியில் கிளை ஒன்றினை அமைத்துள்ளது. பின்வரும் தரவுகளைக் கொண்டு கிளைக் கணக்கினை சரக்கிருப்பு கடனாளிகள் முறையில் தயார் செய்க.

	ரூ.
தலைமையகம் அனுப்பிய சரக்கு	50,000
தலைமையகத்திற்கு திருப்பி அனுப்பிய சரக்கு	1,000
ரொக்க விற்பனை	35,500
கடன் விற்பனை	8,000
தொடக்க சரக்கிருப்பு	10,000
இறுதி சரக்கிருப்பு	11,000

14. There are five departments in a concern. The total indirect expenses amounted to Rs. 12,000. One-sixth of expenses are to be divided equally to all the five departments. The remaining expenses are to be shared in the ratio of sales. Sales of various departments were as follows

Department A	–	Rs. 50,000
Department B	–	Rs. 40,000
Department C	–	Rs. 30,000
Department D	–	Rs. 20,000
Department E	–	Rs. 60,000

How do you allocate the indirect expenses?

ஒர் நிறுவனத்தின் ஐந்து துறைகள் உள்ளன. அதன் மொத்த மறைமுக மேற் செலவுகள் ரூ. 12,000. இச் செலவில் 1/6 பகுதியினை ஐந்து துறைகளுக்கு சரிசமமாக பிரிக்கப்படும் மீத தொகையினை விற்பனை அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. பல்வேறு துறைகளுக்கான விற்பனை பின்வருமாறு

துறை A	–	ரூ. 50,000
துறை B	–	ரூ. 40,000
துறை C	–	ரூ. 30,000
துறை D	–	ரூ. 20,000
துறை E	–	ரூ. 60,000

மறைமுகச் செலவினை நீ எவ்வாறு பிரித்தளிப்பாய்?

15. A purchase a bus on hire purchase from B for Rs. 2,00,000. He pays Rs. 50,000 each at intervals of 2 years. B charges interest at 10% per annum yearly rests. Calculate the amount of cash price of the bus.

A என்பவர் B என்பவரிடமிருந்து பேருந்து ஒன்றினை ரூ. 2,00,000க்கு வாடகை கொள்முதல் முறையில் வாங்கினார். அவர் 2 வருட இடைவெளியில் ரூ. 50,000 வீதம் செலுத்துகிறார். B விதிக்கும் வட்டி வீதம் ஆண்டுக்கு 10% பாக்கி தொகைக்கு வசூலிக்கிறார். பேருந்தின் ரொக்க மதிப்பினைக் கணக்கிடுக.

16. X, Y and Z are partners sharing profits and losses in the ratio of 4:3:2 respectively. Y retires, selling his share of profit to X and Z for Rs. 72,000, Rs. 18,000 being paid by X and Rs. 54,000 being paid by Z. The profit of the firm after Y's retirement is Rs. 3,24,000. Distribute the above profit between X and Z, showing how you arrive at the same.

X, Y மற்றும் Z ஆகியோர் கூட்டாளிகள் அவர்கள் இலாப நட்டங்களை 4:3:2 எனும் விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். Y என்பவர் ஒய்வு பெறுகிறார் அதனால் அவரது லாப பங்கினை X மற்றும் Z யிடம் ரூ. 72,000க்கு விற்கிறார். அதனால் X ரூ. 18,000 மும் Z ரூ. 54,000 மும் அளிக்கிறார்கள் Y யின் ஒய்விற்கு பிறகு நிறுமத்தின் லாபம் ரூ. 3,24,000. இந்த லாபத்தினை X மற்றும் Z இடையே எவ்வாறு நீவிர் பிரித்தளிப்பாய்?

17. Distinguish between Sacrificing ratio and Gaining ratio.

தியாக விகிதம் மற்றும் ஆதாய விகிதம் இடையே வேறுபடுத்துக.

18. X, Y and Z are partners sharing profits and losses in the ratio of 2:2:1 respectively. Y is insolvent and his estate is unable to contribute anything. You are required to pass two journal entries as per Garner Vs Murray rule from the following information.

Realization loss Rs. 1,20,000

Deficiency in Y's capital account Rs. 22,000

Capital ratio of X and Z = 73 : 25.

X, Y மற்றும் Z ஆகியோர் கூட்டாளிகள் அவர்கள் லாப நட்டங்களை 2 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். Y என்பவர் நொடிப்பு நிலையினை அடைகிறார் அவரால் எந்த தொகையும் அளிக்க இயலவில்லை. பின்வரும் தகவல்களைக் கொண்டு கார்னர் எதிர் முர்ரே விதிப்படி நீவிர் இரண்டு குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.

ரொக்கமாக்கப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் ரூ. 1,20,000

Y முதல் கணக்கில் உள்ள பற்றாக்குறை தொகை ரூ. 22,000

X மற்றும் Z ன் முதல் விகிதம் 73 : 25.

19. Describe the different modes in which a partnership firm may be dissolved.

ஒரு கூட்டாண்மை நிறுமம் கலைப்புக்கு உட்படுத்துவதில் உள்ள பல்வேறு வழிகளை விவரி.

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. ABC traders Bombay opened a branch at Baroda on 1.1.2018. The following information is available in respect of the branch for the year 2018.

	Rs.
Goods sent to branch	1,50,000
Cash sales at branch	1,00,000
Credit sales at the branch	1,20,000
Salaries	30,000
Office expenses	24,000
Cash remittance to branch towards petty cash	12,000

	Rs.
Closing petty cash	1,000
Closing debtors	10,000
Closing stock	54,000

Prepare branch account to show the profit or loss from the branch for the year 2018.

பம்பாயில் உள்ள ABC டிரேடர்ஸ் தனது கிளை ஒன்றினை 1.1.2018ல் பரோடாவில் துவங்கியது. பின்வரும் தகவல்கள் கிளையில் 2018 ஆண்டுக்குரியது.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	1,50,000
கிளையின் ரொக்க விற்பனை	1,00,000
கிளையின் கடன் விற்பனை	1,20,000
சம்பளம்	30,000
அலுவலக செலவுகள்	24,000
சில்லரை ரொக்கமாக கிளை பெற்றது	12,000
இறுதி சில்லறை ரொக்கம்	1,000
இறுதி கடனாளிகள்	10,000
இறுதி சரக்கிருப்பு	54,000

2018ம் ஆண்டுக்குரிய இலாப நட்டம் காண்பிக்கும் கிளையின் கணக்கினை தயார் செய்க.

21. List out the advantages of departmental accounting.

துறைவாரி கணக்கியலின் நன்மைகளை பட்டியலிடுக.

22. Mr. Raju purchased a machinery from Kumar & Co on hire purchase system on 1st January 2005. The cash price of the machine was Rs. 1,00,000, Rs. 20,000 to be paid at the time of taking delivery and balance by four instalments of Rs. 20,000 plus interest @ 5% on yearly balances.

Raju failed to pay the instalment due on 31st December 2006. Kumar & Co., took possession of the machinery and valued the same in their books after charging depreciation at 10% p.a on reducing balance method. In 1997 Kumar & Co., incurred Rs. 1,000 for reconditioning and re sold the machinery for Rs. 90,000. Show the ledger accounts in the books of both parties.

திரு ராஜூ என்பவர் குமார் அன் கோவிடமிருந்து இயந்திரம் ஒன்றினை 1.1.2005ல் வாடகை கொள்முதல் முறையில் வாங்கினார். இயந்திரத்தின் ரொக்க மதிப்பு ரூ. 1,00,000. பொருளை எடுக்கும் போது ரூ. 20,000 மீதத் தொகையினை நான்கு தவணைகளாக ரூ. 20,000 மற்றும் அதனுடன் ஆண்டு இருப்புத் தொகைக்கு வட்டியாக 5% செலுத்த ஒப்புக் கொண்டார்.

ராஜூ 31.12.2006 ன் தேதிக்குரிய தவணையை செலுத்த தவறுகிறார் அதனால் குமார் அன் கோ இயந்திரத்தினை திரும்ப எடுத்துக் கொண்டார் மேலும் அவர்களின் ஏடுகளில் ஆண்டுக்கு 10% தேய்மானத்தினை குறைந்து செல் மதிப்பு முறையில் மதிப்பிட்டுள்ளார். 1997ல் குமார் அன் கோ. ரூ. 1,000 செலவு செய்து மறு சீரமைத்து இயந்திரத்தினை ரூ. 90,000க்கு விற்பனை செய்கிறார். இரண்டு தரப்பார் ஏடுகளிலும் தோன்றும் பேரேட்டு கணக்குகளை காண்பிக்கவும்.

23. A, B and C were carrying on business in a firm sharing profits and losses in the ratio of 3 : 2 : 1 respectively. On 31st December 2003, the balance sheet of the firm stood as follows.

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	13,590	Cash	5,900
Capital		Debtors	8,000
A	15,000	Stock	11,690
B	10,000	Buildings	23,000
C	10,000		
	48,590		48,590

B retired on the above date and following terms were agreed upon :

(a) Buildings be appreciated by Rs. 7,000.

(b) Provision for bad debts be made at 5% on debtors.

(c) Goodwill of the firm be valued at Rs. 9,000.

(d) Rs. 5,000 be paid to B immediately and the balance due to him be treated as the loan account carrying interest at 6% p.a.

Prepare ledger accounts in the books of the firm and show balance sheet after B's retirement.

A, B மற்றும் C ஆகியோர் ஒரு தொழில் ஒன்றினை நிறுமத்தின் மூலம் நடத்தி வருக்கின்றனார். அவர்கள் லாப நட்டத்தினை 3 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 31.12.2003 ன் தேதிய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
கடனீந்தோர்	13,590	ரொக்கம்	5,900
முதல்		கடனாளிகள்	8,000
A	15,000	சரக்கிருப்பு	11,690
B	10,000	கட்டிடங்கள்	23,000
C	10,000		
	48,590		48,590

மேற்காணும் தேதியில் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு 'B' ஒய்வு பெறுகிறார்.

(அ) கட்டிட மதிப்பு ரூ. 7,000 உயருகிறது.

(ஆ) கடனாளிகள் மீது 5% வராக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

(இ) நிறுமத்தின் நற்பெயர் மதிப்பு ரூ. 9,000 என மதிப்பிடப்படுகிறது.

(ஈ) B க்கு உடனடியாக ரூ. 5,000க்கு மீத தொகையினை கடன்கணக்காக பராமரிக்க வேண்டும். அத்தொகைக்கு ஆண்டுக்கு 6% வட்டி அளிக்கப்பட வேண்டும்.

நிறுமத்தின் ஏடுகளில் தேவையான பேரேட்டு கணக்குகளையும் மற்றும் B யின் ஒய்வுக்குப்பிறகு உள்ள இருப்புநிலைக் குறிப்பினையும் தயார் செய்க.

24. P, Q and R were partners sharing profits and losses in the ratio of 2 : 2 : 1. The partnership was dissolved on December 31, 2007, and their balance sheet on that due was as follows :

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	14,000	Cash in hand	2,000
Capital		Other assets	38,000
A	10,000		
B	10,000		
C	6,000		
	40,000		40,000

The assets were realized gradually : Rs. 10,000 was received in the first instalment, Rs. 10,000 the second time and Rs. 13,000 finally. Show how the cash was distributed.

P, Q மற்றும் R ஆகியோர் கூட்டாளிகள் அவர்கள் லாப நட்டங்களை 2 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர் கூட்டாண்மை 31.12.2007ல் கலைக்கப்பட்டது. மேலும் அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பும் அந்த தேதியின் இருந்து பாக்கிகளும் பின்வருமாறு :

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
கடனீந்தோர்	14,000	கையிருப்பு ரொக்கம்	2,000
முதல்		இதர சொத்துக்கள்	38,000
A	10,000		
B	10,000		
C	6,000		
	40,000		40,000

சொத்துகள் சீராக ரொக்கமாக்கப்பட்டது : முதல் தவணையாக ரூ. 10,000மும் இரண்டாம் தவணையாக ரூ. 10,000 மற்றும் இறுதியாக ரூ. 13,000 பெறப்பட்டது. ரொக்கம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டது எனக் காட்டுக.